# தமிழ் SAMPLE MATERIAL

## அலகு 2 சொல்லகராதி

### 1. அலகு 2 (i)

1. ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் கண்டறிதல்
2. ஒரு பொருள் தரும் பல சொற்கள், ஒரு பொருட்பன்மொழி, ஒரு சொல்லிற்கு இணையான வேறு சொல் அறிதல், பல பொருள் தரும் ஓர் சொல்
3. பொருந்தா சொல்லைக் கண்டறிதல்
4. அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்
5. இருபொருள் குறிக்கும் சொற்கள்
6. பேச்சுவழக்கு எழுத்து வழக்கு, ஒரு ஓர் பேச்சு வழக்கில் சொற்களுக்கு இணையான தூய தமிழ் சொற்களை இணைத்தல், பேச்சு வழக்கு தொடர்களிலுள்ள பிழைதிருத்தம்
7. சொல்லும் பொருளும் அறிதல்

### 2. அலகு 2(ii)

1. கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல், பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்
2. ஊர்ப் பெயர்களில் மரூஉ
3. ஒரு-ஓர்

### 3. அலகு 2(iii)

1. சொற்களை இணைத்து புதிய சொற்களை உருவாக்குதல் மற்றும், அல்லது, ஆல், பிறகு, வரை, இதுவுமல்ல, இருப்பினும், எனினும், இதனால், அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்த்தல்

### 4.திருக்குறள்

1. பொறையுடைமை

### 5. அறநூல்கள்

1. நான்மணிக்கடிகை

### 6. அறிஞர்கள்

1. கி.வா.ஜகந்நாதன்

# அலகு 2 – 1.ஓரெழுத்து ஒருமொழி

## 7ம் வகுப்பு பருவம் - 2 : இயல் - 2

- ஈ, பூ, கை ஆகிய எழுத்துகள், ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.
- நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் தமிழில் நாற்பத்திரண்டு ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.
- நொ,து ஆகிய இரண்டு சொற்களைத் தவிர ஏனைய நாற்பது சொற்களும் நெடில் எழுத்துகளாக அமைந்தவை ஆகும்.

**ஓரெழுத்து ஒரு மொழிகளும் அவற்றின் பொருளும்**

1. ஆ- பசு
2. ஈ- கொடு
3. ஊ- இறைச்சி
4. ஏ- அம்பு
5. ஐ- தலைவன்
6. ஓ - மதகுநீர் தாங்கும் பலகை
7. கா- சோலை
8. கூ- பூமி
9. கை- ஒழுக்கம்
10. கோ-அரசன்
11. சா- இறந்துபோ
12. சீ- இகழ்ச்சி
13. சே- உயர்வு
14. சோ- மதில்
15. தா - கொடு
16. தீ- நெருப்பு
17. தூ- தூய்மை
18. தே- கடவுள்
19. தை- தைத்தல்
20. நா- நாவு
21. நீ- முன்னிலை ஒருமை
22. நே- அன்பு
23. நை- இழிவு
24. நோ வறுமை
25. பா- பாடல்
26. பூ- மலர்
27. பே - மேகம்
28. பை- இளமை
29. போ- செல்
30. மா- மாமரம்
31. மீ- வான்
32. மு - மூப்பு
33. மே- அன்பு
34. மை- அஞ்சனம்
35. மோ- மோத்தல்
36. யா- அகலம்
37. வா- அழைத்தல்
38. வீ- மலர்
39. வை- புல்
40. வௌ - கவர்
41. நொ- நோய்
42. து- உண்.

1. நன்னூலின் படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை

அ. 40 ஆ.42 இ.44 ஈ.46

2. எழுதினான் என்பது

அ. பெயர்ப் பகுபதம் ஆ. வினைப் பகுபதம்

இ.பெயர்ப் பகாபதம் ஈ. வினைப் பகாபதம்

3. பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்

அ. நான்கு ஆ. ஐந்து இ. ஆறு ஈ. ஏழு

4. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு

அ. பகுதி ஆ. விகுதி இ. இடைநிலை ஈ. சந்தி

## 8ம் வகுப்பு புத்தகம்

### தமிழின் தனிப்பெருஞ் சிறப்புகள் சொற்பூங்கா

- தமிழ்மொழி பழங்காலம் தொட்டு இயங்கி வருதல் அதன் பெருஞ்சிறப்பு.
- தமிழறிந்த, தமிழ்ப் பற்றுள்ள தமிழர் யாரும் கற்க முடியாது எனச் சொல்லும் ஒரு நூல்கூடத் தமிழில் இல்லை. தமிழ்மொழி செந்தமிழாகவும் செழுந்தமிழாகவும் உயிரோட்டத் தமிழாகவும் இருந்து வருவதாலேயே ஆகும்.
- தமிழில் சொல் என்பதற்கு நெல் என்பது ஒரு பொருள். சொன்றி, சோறு என்பவை அவ்வழியில் வந்தவை. நெல்லில் பதர் உண்டு. ஆனால் சொல்லில் பதர் இருத்தலாகாது. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பது தொல்காப்பியர் கூற்று.
- மொழி என்பதற்குச் சொல் என்பதும் ஒரு பொருள். மொழியை (சொல்லை) ஓரெழுத்து மொழி, ஈரெழுத்து மொழி, இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகையாக்குவர்.
- ஓர் எழுத்து மொழி எவை எனின், நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி என்பார் தொல்காப்பியர். குற்றெழுத்து ஒன்று தனித்து நின்று சொல் ஆவது இல்லை என்பதைக் குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே என்பார்.
- நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒரு மொழி என்றால் உயிர்நெட்டெழுத்துகள் ஏழுமா? உயிர்மெய் நெட்டெழுத்துகள் 126 உண்டே!
- உயிர் வரிசையில் ஆறு எழுத்துகளும், ம வரிசையில் ஆறு எழுத்துகளும், த, ப, ந என்னும் வரிசைகளில் ஐந்து ஐந்து எழுத்துகளும், க, ச, வ என்னும் வரிசைகளில் நான்கு எழுத்துகளும், ய வரிசையில் ஒன்றும் ஆக நாற்பது நெடில்கள் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார் நன்னூலார் நொ, து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்றார்.

## ஓரெழுத்து ஒருமொழிகள்

உயிர் எழுத்து - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ

மகர வரிசை - மா,மீ, மூ,மே,மை,மோ

தகர வரிசை - தா தீ, தூ, தே, தை

பகர வரிசை – பா, பூ, பே, பை, போ

நகர வரிசை - நா, நீ, நே, நை, நோ

ககர வரிசை - கா,கூ, கை, கோ

சகர வரிசை - சா, சீ, சே, சோ

வகர வரிசை – வா, வீ, வை, வௌ

யகர வரிசை – யா

குறில் எழுத்து - நொ, து

- தொல்காப்பியருக்கு நெடிது நாள் பின்னே தோன்றிய நன்னூலார் நொடிது என்னும் உயிர்மெய் எழுத்துகளும் பொருளுடைய ஓர் எழுத்து மொழி என்பார்.
- பூ என்பது ஓரெழுத்து ஒரு மொழி, கா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழி. இவை இரண்டையும் இணைத்துப் பூங்கா எனக் கலைச்சொல் ஆக்கி வைத்துள்ளனர்.
- யா என்பது வினா. யாது, யாவர், யாவன், யாவள், யாங்கு, யாண்டு, யார், யாவை என்று எல்லாம் வினாவுவதற்கு முன் வந்து நிற்கும் எழுத்து 'யா' தானே!
- ஆ,மா, நீ, மீ, பீ, ஊ, சே, தே இவ்வாறான ஓரெழுத்து ஒரு மொழிகளும் உள்ளன. பூங்கா இணைந்தது போல ஆ, மா என்பவை இணைந்து ஆமா என்னும் கலைச்சொல் வடிவம் கொண்டமை பண்டைக் காலத்திலேயே உண்டு. காட்டுப் பசுவுக்கு 'ஆமா' என்று பெயர்.
- மா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழிகளுள் ஒன்று. நாட்டிலுள்ள பெருமக்கள் பெரிதும் கூடும் அவையை மாநாடு என்கிறோம். பல குறு நிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை மாநிலம் என்கிறோம்.
- உலகப் பெரும் பரப்பையும் இயக்கத்தையும் சுட்ட மாஞாலம் என்கிறோம். இவ்வாறெல்லாம் இயல்பாக மா என்னும் ஓரெழுத்து ஒருமொழி மக்கள் வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் திகழ்கின்றது.
- மாநிறம் என மாந்தளிர் நிறத்தை ஒப்புமை காட்டி உரைப்பது பெருவழக்கு. மா என்பது விலங்கையும் குறிக்கும். அரிமா, பரிமா, கரிமா, வரிமா, கரிமா என்றெல்லாம் வந்து விலங்கினப் பெயராகி நிற்கின்றது.

- ஈ என்னும் பொதுப் பெயர் ஓயாது ஒலி செய்யும் ஒலிக்குறிப்பைக் காட்டி நிற்கிறது. மாட்டு ஈ, தேன் ஈ எனப் பகுத்து வழங்கும் வழக்கம் உள்ளது. ஈ என்பது ஈக என்னும் பொருளில் வழங்குதல் வெளிப்படை, ஈ என்று பல்லைக் காட்டாதே என்று அறிவுரை கூறுவதும் உண்டு.
- போ, வா, நீ, சூ, சே, சை, சோ என்பவை எல்லாம் இக்காலத்தில் அனைவரும் வழங்கும் சொற்களே.
- நன்னூலார் கூறிய சில ஓரெழுத்து ஒரு மொழிகள் இன்று வழக்கில் இல்லாதவை என்றும், வழக்கிலுள்ள சில ஓரெழுத்து ஒரு மொழிகள் நன்னூலார் கூறிய பட்டியலில் இல்லாதவை என்றும் தெளிவு ஏற்படும்.
- இன்னொருவகையாகவும் பார்க்கலாம். ஆன் என்பது ஆ ஆகியது மான் என்பது மா ஆகியது கோன் என்பது கோ ஆகியது தேன் என்பது தே ஆகியது பேய் என்பது பே ஆகியது. இவையெல்லாம் காலவெள்ளத்தில் கரைந்து தேய்ந்தவை.
- எட்டத்தில் போகிற ஒருவனை ஏய் என அழைத்தனர். ஏய் என்பது என்னோடு கூடு, பொருந்து, சேர் என்னும் பொருளை உடையது. ஏய் என்பது ஏ என வழக்கில் ஊன்றிவிட்டது. அம்பை ஏவு என்பர். ஏவுதல் என்பது 'அம்புவிடுதல்'. ஏவும் அம்பு 'ஏ' என்றாகியது. அம்பு விரைந்து செல்வது போலச் சென்று உரிய கடமை புரிபவன் ஏவலன் எனப்பட்டான். அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ் அதில் வல்லவனை ஏகலைவன் என்று பாராட்டியது.
- ஏவு என்னும் சொல் 'ஏ' என்று ஆனது மட்டுமன்றி 'எய்' எனவும் ஆயிற்று. ஏவுகின்ற அம்பைப் போல் கூர்முள்ளை உடைய முள்ளம்பன்றியின் பழம்பெயர் எய்ப்பன்றி. அம்பை எய்பவர் எயினர். அவர்தம் மகளிர் எயினியர். சங்கப்புலவர்களுன் எயிவனாரும் உனர். எயினியாரும் உளர்.

tnpscbooks

**நூல் வெளி** - இரா. இளங்குமரனார்

- செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படும். இரா.இளங்குமரனார் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- நூலாசிரியர், இதழாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர் எனப் பன்முகத் திறன் பெற்றவர்.
- திருச்சிக்கு அருகில் அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையும் பாவாணர் நூலகமும் அமைத்துள்ளார்.

**செந்தமிழ் அந்தணர் -நூல்கள்**

- இலக்கண வரலாறு
- தமிழிசை இயக்கம்
- தனித்தமிழ் இயக்கம்
- தேவநேயம் (தொகுத்த நூல்)
- தமிழின் தனிப்பெருஞ் சிறப்புகள்

## 7ம் வகுப்பு பழைய புத்தகம்(பக்க எண் 174)

**கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் குறிக்கும் ஓரெழுத்து ஒரு மொழிகளை எடுத்து எழுதுக(ஏ, தீ, ஐ, சோ, கோ, பூ)**

- அரண் - சோ
- அரசன்- கோ
- அம்பு - ஏ
- தலைவன் - ஐ
- நெருப்பு - தீ
- மலர் – பூ

**அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளை உரிய கட்டத்தில் நிரப்புக( பாடல், சோலை, வருக, பசு, கொடு, திங்களின் பெயர்)**

- கா - சோலை
- தா - கொடு
- தை - திங்களின் பெயர்
- பா - பாடல்
- வா - வருக
- ஆ – பசு

## 7ம் வகுப்பு பருவம் - 2

## இயல் - 2

ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.

1. --------- புல் மேயும். ஆ
2. -------- சுடும். தீ
3. -------- பேசும்: கை
4. ------- பறக்கும். ஈ
5. ---------- மணம் வீசும். பூ

**பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக.**

1. (எ.கா) தா - கொடு
2. தீ ------நெருப்பு
3. பா ------------ பாடல்
4. தை ---------- தைத்தல்

5. வை ------ புல்
6. மை ------ அஞ்சனம்

## அலகு 2 - 2 . ஒரு பொருள் தரும் பல சொற்கள் ஒரு பொருட் பன்மொழி ஒரு சொல்லிற்கு இணையான வேறு சொல் அறிதல் பல பொருள் தரும் ஒரு சொல்

### 8ம் வகுப்பு (பக்க எண் 89)

கீழ்க்காண்பவற்றுள் ஒரு சொல்லை எடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களுடன் இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

- மா – மாவிலை, மாமரம், மாங்காய்
- தேன் – மலர்த்தேன், தேன்சிட்டு, தேன்கூடு
- மலர் – தேன்மலர்
- செம்மை – சேயிலை, செங்குருவி, செந்தேன்
- சிட்டு – சிட்டுக்குருவி, தேன்சிட்டு
- கனி – மாங்கனி, கனிமரம், தேன்கனி
- குருவி – சிட்டுக்குருவி, குருவிக்கூடு
- இலை – மாவிலை
- காய் – மாங்காய், காய்கனி
- கூடு – தேன்கூடு, குருவிக்கூடு
- முட்டை – குருவிமுட்டை
- மரம் – மாமரம், செம்மரம்

### 7ம் வகுப்பு பருவம் - 2

### இயல் - 3

பேசும் ஓவியங்கள்

- துணியை எழினி, திரைச்சீலை, கிழி, படாம் எனப் பல பெயர்களில் அழைப்பர்.
- ஓவியம் - ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம், படம், படாம், வட்டிகைச் செய்தி

- ஓவியம் வரைபவர் – கண்ணுள் வினைஞர், ஓவியப் புலவர், ஓவமாக்கள், கிளவி வல்லோன், சித்திரக்காரர், வித்தகர்
- ஓவியக்கூடம் எழுதெழில் அம்பலம், எழுத்து நிலை மண்டபம், சித்திர அம்பலம், சித்திரக் கூடம், சித்திர மாடம், சித்திர மண்டபம், சித்திர சபை ஓவியம் வரையப் பயன்படும்

## 8ம் வகுப்பு இயல் 1 (பக்க எண் 22)

ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.

(எ.கா.)அணி- பல அணிகளை அணிந்த வீரர்கள், அணி அணியாய்ச் சென்றனர்.

**படி** : படித்துக் கொண்டிருந்த மாலதி, மாடு கறந்த ஒரு படிப்பாலை எடுத்துக் கொண்டு, படியில் ஏறிச் சென்று தாயிடம் கொடுத்தாள்.

**திங்கள்** : சித்திரைத் திங்களில், முதல் திங்கள் அன்று, இரவில் திங்களைப் பார்ப்பது நல்லது.

**ஆறு** : ஆறுமுகம், காலையில் துவைப்பதற்காக ஆறு துணிகளை எடுத்துக்கொண்டு காவேரி ஆற்றுக்குச் சென்றான்.

## 9ம் வகுப்பு இயல் - 5

**ஒருசொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள்**

**உரிச்சொற்கள்**

- உரிச்சொற்கள் பெயர்களையும் வினைகளையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன. உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும் .உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையவை. ஆனால் இவை தனித்து வழங்கப்படுவதில்லை. உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று நன்னூலார் கூறுகிறார்.

| | |
|---|---|
| கடிமலர் – மணம் மிக்க மலர்<br>கடிநகர் – காவல் மிக்க நகர்<br>கடிவிடுதும் – விரைவாக விடுவோம்<br>கடிநுனி – கூர்மையான நுனி | ஒரு சொல் பல பொருளுக்கு உரியது |
| உறு, தவ, நனி என்ற மூன்று உரிச் சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன.<br>உறுபசி தவச்சிறிது நனிநன்று | பல சொல் ஒரு பொருள் |

- உரிச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிற்கு முன்னால் வந்து பொருள் உணர்த்துகின்றன. மேலும் அவை

1) ஒரு சொல் பல பொருள்களுக்கு உரியதாய் வருவதும் உண்டு

2) பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாய் வருவதும் உண்டு

- மழ, குழ என்பவற்றிலிருந்து உருவானவை மழலை, குழந்தை போன்ற சொற்கள். உவப்பு (உவகை), பசப்பு (நிறம் மங்குதல்), பயப்பு (பயன்) போன்றவை அப்படியே பயன்படுகின்றன. செழுமை என்பது செழிப்பு, செழித்த, செழிக்கும் எனப் பெயராகவும், வினையாகவும்பயன்படுகிறது.விழுமம்என்பதுவிழுப்பம், விழுமுதல், விழுமியஎனப் பெயராகவும் வினையாகவும் பயன்படுகிறது. பிற உரிச்சொற்களும் அவ்வாறே தற்காலத்தில் பயன்படுகின்றன.

**5. பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.**

அ) மா பெரும் பொதுக்கூட்டம் [கடி / மா]

ஆ) கடி விடுதும் (உறு/கடி]

இ) வாள் நுதல் [வாள்/ தவ]

ஈ) சால சிறந்தது [சால/மழ]

உ) கடி மனை [கடி/தட]

## 11ம் வகுப்பு இயல் - 2

**நிகண்டுகளில் யானையைக் குறிக்கும் வேறு சொற்கள்**

| | |
|---|---|
| 1. கயம் | 2. அரசுவா |
| 3. வேழம் | 4. அல்லியன் |
| 5. களிறு | 6. பிளிறு |
| 7. களபம் | 8.மாதங்கம் |
| 9. கைம்மா | 10. வாரணம் |
| 11. அஞ்சனாவதி | 12. அத்தி |
| 13. அத்தினி | 14. அனுபமை |
| 15. ஆனை | 16. இபம் |
| 17. இரதி | 18. குஞ்சரம் |
| 19. வல்விலங்கு | 20. கரி |
| 21. அஞ்சனம். | |

## 6ம் வகுப்பு பழைய புத்தகம் இயல் - 4 பக்களண் 49

**மொழிக்குள் வியப்பு**

- ஒரு சொல் பல பொருள். பாரதிதாசன் பாடலில் மூன்று இடங்களில் 'தழை' என்னும் சொல் இடம் பெற்றுள்ளது.-என்ற தொடரில் தழை என்பது மரமும் தழையும் செடிகொடியைக் குறித்தது.

  இங்குத் 'தழை' என்பது பெயர்ச்சொல்.

  தழையா வெப்பம் தழைக்கவும் – என்ற தொடரில் தழை என்பது வினைச்சொல்.

  தழைத்தல்-என்பதற்குக் கூடுதல் என்றும், குறைதல் என்றும் பொருளுண்டு.

  (எ.கா)

  நாடு தழைக்க-நாடு வளர்க.

  சேலையைத் தழையத் தழைய உடுத்தினாள்.

  தாழ்ந்து படியுமாறு உடுத்தினாள்.

  இது வியப்பான செய்தி தானே!

  பழமொழி நானூறு செய்யுளைப் பாருங்கள்.

  ஆற்றுணா - ஆறு +உணா

  ஆறு என்பது வழியைக் குறிக்கிறது.

  ஆறு என்ற சொல்லுக்குத் தான் எத்தனை பொருள்கள்?

  ஆறு –ஓர் எண் (6)

  ஆறு -நதி

  ஆறு -வழி

tnpscbooks

## 7ம் வகுப்பு இயல் -9 பக்க எண்.160

- ஓவியக் கலை ஓவு, ஓவம், ஓவியம், சித்திரம், படம், படாம், வட்டிகைச் செய்தி எனப் பல பெயர்களால் வழங்கப் பெற்றது. ஓவியக் கலைஞர் ஓவியர், ஓவியப்புலவன், கண்ணுள் வினைஞன், சித்திரகாரர், வித்தக வினைஞன், வித்தகர், கிளவி வல்லோன் என அழைக்கப்பட்டார். ஓவியர் எண்ணங்களின் எழுச்சியைப் பல வண்ணங்களின் துணை கொண்டு எழுதுவோராதலின் கண்ணுள் வினைஞர் எனப் புகழப் பெற்றார்.
- நச்சினார்க்கினியர் தம் உரையில் ஓவியருக்கு, 'நோக்கினார் கண்ணிடத் தேதம் தொழில் நிறுத்துவோர்' என இலக்கணம் வகுத்துள்ளார்
- ஓவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்றுப் புலமை பெற்ற ஆசிரியர் ஓவியப் புலவன் எனப் போற்றப்பட்டார்.
- ஓவியக்கலைஞர் குழுவை ஓவியமாக்கள் என்றழைத்தனர்.

- ஆண் ஓவியர் சித்திராங்கதன் எனவும், பெண் ஓவியர் சித்திரசேனா எனவும் பெயர் பெற்றிருந்தனர்.
- அக்காலத்தில் ஓவியங்கள் வரைவதற்கென்று தனியேங்கள் அமைந்திருந்தன. இங்ஙனம் ஓவியம் வரையப்பட்ட இடங்கள் சித்திரக்கூடம், சித்திரமாடம், எழுதுநிலை மண்டபம், எழுதெழில் அம்பலம் என வழங்கப்பட்டன. இறை நடனம் புரிவதற்கே சித்திர சபை ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். இதிலிருந்து ஓவியக் கலையில் தமிழர்க்கு இருந்த ஈடுபாட்டையும், கண்ணுகர் விருப்ப உணர்வையும், மக்களிடம் அதற்கிருந்த செல்வாக்கையும் மேன்மையையும் அறியலாம்.

## 8ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் 1 பக்க எண் 85

பல பொருள் தரும் ஒரு சொல்லைப் பொருத்துக.

| பல பொருள் | ஒரு சொல் |
|---|---|
| உள்ளம், வீடு, இடம் | திங்கள் |
| மாதம், கிழமை, சந்திரன் | திரு |
| அழகு, நகை, வரிசை | அகம் |
| கதிரவன், வெளிச்சம், விளக்கு | அணி |
| மேன்மை, இலக்குமி, செல்வம், மரியாதை அடை | ஒளி |

tnpscbooks

## 9ம் வகுப்பு பழையது இயல் - 3

இருபொருள்எழுதுக.

1. திரை – மறைத்தல், திரைச்சீலை,திரைப்படம்
2. கலிங்கம் –நூல், பட்டு
3. கலை-அறிவியல், பண்பாடு
4. கவி-பாடல், கவிஞர்

## 9ம் வகுப்பு பழையது இயல் - 7

ஒரு பொருள் குறித்த பல சொற்கள்

- ஒரு பொருளுக்குப் பல்வேறு சொற்கள் காணப் பெறுதல் மொழியின் வளத்தைக் காட்டும். சொற்கள் பயன்படுத்தும் இடத்திற்கேற்பப் பொருள் தரும்.

- ஒரு பொருள் குறித்த பல சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை சொற்பொருளின் விரிவை மேலும் எடுத்துக்காட்டும். நாம் பயன்படுத்துகையில் மொழிவளம் பெருகும். அவற்றுள் சில:

(எ.கா.)அழகு -பொலிவு, எழில், வனப்பு

இரக்கம் - .அருள், பரிவு, கருணை

கிளி - தத்தை, சுகம், கிள்ளை

மலை -வெற்பு, சிலம்பு, பொருப்பு

கதிரவன் -ஆதவன், பகலவன், ஞாயிறு

கீழ்க்காணும் ஒரு பொருள் குறித்த பல சொற்களை எழுதுக.

1.வயல் – காடு, தோட்டம், தோப்பு

2.கடல் – அரலை, அரி, அலை, அழுவம், அளம், அளக்கர், ஆர்கலி

3.நெருப்பு –தீ, அக்கினி, தழல், உடற்சூடு, கனல், தணல்

## 9ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 1 பக்க எண் 105

கீழ்க்காணும் சொற்களிலிருந்து பல சொற்களை உருவாக்குக

- முத்துக்குளித்தல் – முத்து, குளி, குளித்தல், முதல், துளி, குத்து தத்து, குத்தல், முதுகு, தளி, முக்கு
- பல்கலைக்கழகம் – பல், கலை, கழகம், கல், பகல், பழம்
- கலங்கரை விளக்கம் – கரை, விளக்கம், விரை, கலம்
- குதிரையேற்றம் - குதிரை, திரை, ஏற்றம், குரை, குற்றம்
- கவியரங்கம் - கவி அரங்கம், ரகம், கயம்

## 10ம் வகுப்பு பழையது பக்க எண் 98

ஒருபொருட் பன்மொழி

1. திருமால் குன்றம் உயர்ந்தோங்கி நிற்கிறது.

2. அந்த ஏழைக் குழந்தையின் கண்கள் குழிந்தாழ்ந்து காணப்படுகின்றன.

இவ்விரு தொடர்களிலும் ஒரு பொருள் குறித்துத் தொடர்ந்து வரும் இரு சொற்கள் உள்ளன.அவை உயர்ந்தோங்கிய, குழிந்தாழ்ந்து என்பவை. உயர்ந்து, ஓங்கிய ஆகிய இரு சொற்களும், உயர்ந்த என்னும் ஒரே பொருளிலும், குழிந்து, ஆழ்ந்து என்பவை குழிந்து என்னும் ஒரே பொருளிலும் வருகின்றன.

ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது ஒரு பொருட் பன்மொழியாகும்.

(எ-டு) 1. நடுமையம்.

2. மீமிசைஞாயிறு.

எனும் தொடர்களில் நடுப்பகுதி எனும் ஒரே பொருளை உணர்த்தும் நடு, மையம் எனும் இரு சொற்களும், மேற்பகுதி எனும் பொருளைத் தரும் மீ, மிசை எனும் இரு சொற்களும் இணைந்து வந்து ஒரே பொருளை உணர்த்தியுள்ளன.

ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின் வழா - நன்னூல், 398.

புற வய வினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) ஒரு பொருள் குறித்து வரும் சொற்களையே ஒரு பொருட் பன்மொழியாகும்

ஆ) ஒரு பொருட் பன் மொழிக்குச் சான்று மீமிசை ஞாயிறு என்பர்.

பொருந்தா சொல்லைக் கண்டறிக

## அலகு 2(i) - 3 பொருந்தா சொல்லைக் கண்டறிதல்

### 8ம் வகுப்பு இயல் 4

**வேற்றுமை**

- பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தும் முறையை வேற்றுமை என்பர். இதற்காகப் பெயர்ச்சொல்லுடன் இணைக்கப்படும் அசைகளை வேற்றுமை உருபுகள் என்று கூறுவர்.
- சில இடங்களில் உருபுகளுக்குப் பதிலாக முழுச்சொற்களே வேற்றுமை உருபாக வருவதும் உண்டு. அவற்றைச் சொல்லுருபுகள் என்பர்.
- ஓவியர் தூரிகையால் ஓவியம் திட்டினார். இதில் ஆல் என்பது வேற்றுமை உருபாக வந்துள்ளது.
- ஓவியர் தூரிகை கொண்டு ஓவியம் தீட்டினார். இதில் கொண்டு என்பது சொல்லுருபாக வந்துள்ளது.

**வேற்றுமையின் வகைகள்**

- வேற்றுமை எட்டு வகைப்படும். அவை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை ஆகியனவாகும்.
- முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய உள்ள ஆறு வேற்றுமைகளுக்கும் உருபுகள் உண்டு.
- வேற்றுமை உருபுகள் இடம் பெற்றுள்ள தொடர்களை வேற்றுமைத் தொடர்கள் என்பர். வேற்றுமை உருபுகள் இடம் பெற வேண்டிய இடத்தில் அஃது இடம்பெறாமல் மறைந்திருந்து பொருள் தந்தால் அதனை வேற்றுமைத்தொகை என்பர்.

**முதல் வேற்றுமை**

- பெரும்பாலான சொற்றொடர்களில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகிய மூன்று உறுப்புகள் இடம் பெற்றிருக்கும்.
- எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் எழுவாய் தனித்து நின்று இயல்பான பொருளைத் தருவது முதல் வேற்றுமை ஆகும். முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும் குறிப்பிடுவர்.

(எ.கா.) பாவை வந்தாள்.

**இரண்டாம் வேற்றுமை**

இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பதாகும்.

கபிலர் பரணரைப் புகழ்ந்தார்.

கபிலரைப் பரணர் புகழ்ந்தார்.

- இவ்விரு தொடர்களையும் கவனியுங்கள். இரண்டாம் வேற்றுமை உருபு ( ஐ ) எந்தப் பெயருடன் இணைகிறதோ அப்பெயர் செயப்படுபொருளாக மாறிவிடுகிறது. இவ்வாறு ஒரு பெயரைச் செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுவதால் இரண்டாம் வேற்றுமையைச் செயப்படுபொருள் வேற்றுமை என்றும் கூறுவர்.
- இரண்டாம் வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய ஆறு வகையாள பொருள்களில் வரும்

- ஆக்கல் - கரிகாலன் கல்லணையைக் கட்டினான்
- அழித்தல் - பெரியார் மூடநம்பிக்கைகளை ஒழித்தார்
- அடைதல் - கோவலன் மதுரையை அடைந்தான்
- நீத்தல் - காமராசர் பதவியைத் துறந்தார்
- ஒத்தல் - தமிழ் நமக்கு உயிரைப் போன்றது
- உடைமை - வள்ளுவர் பெரும் புகழை உடையவர்

**மூன்றாம் வேற்றுமை**

- ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகிய நான்கும் மூன்றாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் ஆகும். இவற்றுள் ஆல், ஆன் ஆகியவை கருவிப்பொருள், கருத்தாப் பொருள் ஆகிய இரண்டு வகையான பொருள்களில் வரும். கருவிப் பொருள் முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.
- கருவியே செய்யப்படும் பொருளாக மாறுவது முதற்கருவி - மரத்தால் சிலை செய்தான். ஒன்றைச் செய்வதற்குத் துணையாக இருப்பது துணைக்கருவி - உளியால் சிலை செய்தான்.
- கருத்தாப்பொருள் ஏவுதல் கருத்தா, இயற்றுதல் கருத்தா என இருவகைப்படும். பிறரைச் செய்யவைப்பது ஏவுதல் கருத்தா - கரிகாவனால் கல்லணை கட்டப்பட்டது. தானே செய்வது

இயற்றுதல் கருத்தா - சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது. ஆன் என்னும் உருபு பெரும்பாலும் செய்யுள் வழக்கில் இடம்பெறும். (எ.கா.) புறந்தூய்மை நீரான் அமையும்.

- ஓடு, ஒடு ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும். (எ.கா.) தாயொடு குழந்தை சென்றது. அமைச்சரோடு அலுவலர்கள் சென்றனர்.

**நான்காம் வேற்றுமை**

- நான்காம் வேற்றுமைக்கு உரிய உருபு கு என்பதாகும்.
- இது கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருள்களில் வரும்.

- கொடை - முல்லைக்குத் தேர் கொடுத்தான்.
- பகை – புகை மனிதனுக்குப் பகை.
- நட்பு – கபிலருக்கு நண்பர் பரணர்.
- தகுதி - கவிதைக்கு அழகு கற்பனை.
- அதுவாதல் - தயிருக்குப் பால் வாங்கினான்.
- பொருட்டு - தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.
- முறை - செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ.
- எல்லை - தமிழ்நாட்டுக்குக் கிழக்கு வங்கக்கடல்.

**நான்காம் வேற்றுமை**

- உருபுடன் கூடுதலாக ஆக என்னும் அசை சேர்ந்து வருவதும் உண்டு.

(எ.கா.) கூலிக்காக வேலை

**ஐந்தாம் வேற்றுமை**

- இன், இல் ஆகியவை ஐந்தாம் வேற்றுமை உருபுகள் ஆகும். இவை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது போன்ற பொருள்களில் வரும்.

- நீங்கல் - தலையின் இழிந்த மயிர்
- ஒப்பு - பாம்பின் நிறம் ஒரு குட்டி.
- எல்லை - தமிழ்நாட்டின் கிழக்கு வங்கக்கடல்.
- ஏது - சிலேடை பாடுவதில் வல்லவர் காளமேகம்.

**ஆறாம் வேற்றுமை**

- அது, ஆது, அ ஆகியவை ஆறாம் வேற்றுமை உருபுகள் ஆகும்.
- இவ்வேற்றுமை, உரிமைப் பொருளில் வரும். உரிமைப் பொருளைக் கிழமைப் பொருள் என்றும் கூறுவர்.

- (எ.கா.) இராமனது வில். நண்பனது கை.
- ஆது, அ ஆகிய உருபுகளை இக்காலத்தில் பயன்படுத்துவது இல்லை.

**ஏழாம் வேற்றுமை**

- ஏழாம் வேற்றுமைக்கு உரிய உருபு கண். மேல், கீழ், கால், இல், இடம் போன்ற உருபுகளும் உண்டு.
- இடம், காலம் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களில் ஏழாம் வேற்றுமை உருபு இடம்பெறும். (எ.கா.) எங்கள் ஊரின்கண் மழை பெய்தது. இரவின்கண் மழை பெய்தது.
- இல் என்னும் உருபு ஐந்தாம் வேற்றுமையிலும் ஏழாம் வேற்றுமையிலும் உண்டு. நீங்கல் பொருளில் வந்தால் ஐந்தாம் வேற்றுமை என்றும் இடப் பொருளில் வந்தால் ஏழாம் வேற்றுமை என்னும் கொள்ள வேண்டும்.

**எட்டாம் வேற்றுமை**

- விளிப்பொருளில் வரும். படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதையே விளி வேற்றுமை என்கிறோம். இவ்வேற்றுமைக்கு என்று தனியே உருபு கிடையாது. பெயர்கள் திரிந்து வழங்குவது உண்டு. அண்ணன் என்பதை அண்ணா என்றும் புலவர் என்பதைப் புலவரே என்றும் மாற்றி வழங்குவது எட்டாம் வேற்றுமை ஆகும்.

## 8ம் வகுப்பு பருவம் - 2 இயல் - 1

**உரிய எழுத்து வழக்குச் சொற்களை அறிவோம்**

- பேச்சு வழக்கு - எழுத்து வழக்கு
- கோர்த்து - கோத்து
- சுவற்றில் - சுவரில்
- நாட்கள் - நாள்கள்
- மனதில் - மனத்தில்
- பதட்டம் - பதற்றம்
- சிலவு -செலவு
- அருகாமையில் - அருகில்

## 8ம் வகுப்பு பருவம் - 2 இயல் - 1

**பிழை நீக்கி எழுதும் திறன்**

- கீழுள்ள பகுதியைப் படித்து பிழைகளை பட்டியலிடுக
- எடுத்துக்காட்டு : ஓர் மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்கொண்டார். அந்த சுற்றுலாவில் அவர் தான் கண்டதைக் கூறவே ஒரு கூட்டத்தை

கூட்டினால் மேலே உள்ள பத்தியை படித்து கொள்ளலாம் அவற்றில் எத்தனை பிள்ளைகள் உள்ளன பட்டியலிடுக

பிழை - சரி

- ஓர் மாவட்டம் - ஒரு மாவட்டம்
- ஒரு அமைச்சர் - ஓர் அமைச்சர்.
- அவரது மகனோடு - அவருடைய மகனோடு
- மேற்க்கொண்டார் - மேற்கொண்டார்
- அந்த சுற்றுலா - அந்தச் சுற்றுலா
- கண்டதைகூறவே - கண்டதனைக் கூறவே
- அவர்தான் - அவர்தாம்

## 7ம் வகுப்பு பருவம் - 1 இயல் - 1

பேச்சு வழக்கு - எழுத்து வழக்கு

- தலகாணி - தலையணை
- வேர்வை - வியர்வை
- வூடு - வீடு
- வெல - வேலை
- தண்ணி - தண்ணீர்
- வெளக்கு - விளக்கு

tnpscbooks

## 7 ம் வகுப்பு பருவம் - 2 இயல் - 1

வழக்குச் சொற்களும் திருத்தமான சொற்களும்

ஆசிரியர் : மணி நேற்று ஏன் பள்ளிக்கு வரவில்லை?

மணி : நேத்து வகுத்து வலி ஐயா

ஆசிரியர் : தமிழரசி மணி சொன்னது சரியா?

தமிழரசி : தவறு நேற்று வயிற்று வலி என சொல்லுதல் வேண்டும் ஐயா.

ஆசிரியர்: சிறப்பாக சொன்னாய் இப்படித்தான் நாம் சொற்களைப் பிழை இன்றி பேசவும், எழுதவும், பழகுதல் வேண்டும்.

பயிற்சி வழக்குச் சொற்களை நீக்கி திருத்தமான சொற்களை எழுதுக

1.பள்ளிக்கு அருகாமையில் என் வீடு இருக்கிறது.

பள்ளிக்கு அருகாமையில் எனது வீடு இருக்கிறது.

2. என் வீட்ல யாருமே இல்ல

எனது வீட்டில் யாரும் இல்லை.

3. எம் ஊர் ஆத்துல தண்ணியே இல்லே

எனது ஊர் ஆற்றில் தண்ணீர் இல்லை

4. என் அப்பா அதிகமாக சிலவு செய்கிறார்.

எனது அப்பா அதிகமாக செலவு செய்கிறார்.

## அலகு 2 – 7. சொல்லும் பொருளும்

### 6ம் வகுப்பு பருவம் 1 இயல் 1,2,3

- நிருமித்த - உருவாக்கிய
- சமூகம் - மக்கள் குழு
- விளைவு - வளர்ச்சி
- அசதி – சோர்வு
- ஆழிப் பெருக்கு - கடல் கோள்
- மேதினி - உலகம்
- ஊழி – நீண்டதொரு காலப்பகுதி
- உள்ளப்பூட்டு -உள்ளத்தின் அறியாமை
- திங்கள் - நிலவு
- கொங்கு- மகரந்தம்
- அலர் - மலர்தல்
- திகிரி – ஆணைச்சக்கரம்
- பொற்கோட்டு – பொன்மயமான சிகரத்தில்
- மேரு - இமயமலை
- நாமநீர் - அச்சம் தரும் கடல்
- அளி - கருணை
- காணி -நில அளவைக் குறிக்கும் சொல்
- மாடங்கள் - மாளிகையின் அடுக்குகள்
- சித்தம் - உள்ளம்.
- இயன்றவரை - முடிந்தவரை
- ஒருமித்து - ஒன்றுபட்டு
- ஔடதம் - மருந்து

tnpscbooks

## 7ம் வகுப்பு பருவம் 3 - இயல் 1,2,3

- மாரி - மழை
- வறந்திருந்த - வறண்டிருந்த
- புகவா – உணவாக
- மடமகள் - இளமகள்
- நல்கினாள் - கொடுத்தாள்
- முன்றில் - வீட்டின் முன் இடம் (திண்ணை) இங்கு வீட்டைக் குறிக்கிறது
- குழி - நில அளவைப்பெயர்
- சாண் - நீட்டல் அளவைப்பெயர்
- மணி - முற்றிய நெல்
- சும்மாடு - பாரம் சுமப்பவர்கள் தலையில் வைத்துக் கொள்ளும் துணிச்சுருள்
- சீலை - புடவை
- மடை - வயலுக்கு நீர் வரும் வழி
- கழலுதல் - உதிர்தல்
- வையம் - உலகம்
- வெய்ய - வெப்பக்கதிர் வீசும்
- சுடர்ஆழியான் - ஒளிவிடும் சக்கரத்தை உடைய திருமால்
- இடர்ஆழி - துன்பக்கடல்
- சொல் மாலை – பாமாலை
- தகளி - அகல்விளக்கு
- ஞானம் – அறிவு
- நாரணன் – திருமால்
- வித்து – விதை
- ஈன – பெற
- நிலன் – நிலம்
- களை - வேண்டாத செடி
- பைங்கூழ் - பசுமையான பயிர்
- வன்சொல் - கடுஞ்சொல்
- சாந்தம் - அமைதி
- மகத்துவம் - சிறப்பு
- பேதங்கள் – வேறுபாடுகள்
- தாரணி - உலகம்
- தத்துவம் - உண்மை
- இரக்கம் - கருணை

## 7ம் வகுப்பு பழைய புத்தகம்
## பருவம் 1 இயல்கள் 1,2,3

- பண் – இசை
- வண்மை – கொடைத்தன்மை
- போற்றி – வாழ்த்துகிறேன்
- புரை – குற்றம்
- பயக்கும் – தரும்
- சுடும் – வருத்தும்
- அன்ன – அவை போல்வன
- எய்யாமை – வருந்தாமை
- அகம் – உள்ளம்
- அமையும் – உண்டாகும்
- அறிகை - அறிதல் வேண்டும்
- தானை – படை
- கடனே – கடமை
- காதல் - அன்பு, விருப்பம்

- மேதை - அறிவு நுட்பம்
- வண்மை -ஈகை, கொடை
- பிணி – நோய்
- மெய் – உடம்பு
- சிறந்தன்று – சிறந்தது
- வழிபடுதல் - போற்றி வணங்குதல்
- சுழி – உடல் மீது உள்ள சுழி, நீர்ச்சுழி
- துன்னலர்- பகைவர், அழகிய மலர்
- பரிவாய் - அன்பாய்
- சாடும் - தாக்கும், இழுக்கும்
- ஆடுபரி ஆடுகின்ற குதிரை
- கைம்மண்ணளவு- ஒரு சாண்எனவும் பொருள் கொள்வர்
- நாணம் - செய்யக்கூடாதனைச் செய்ய அச்சப்படுதல்
- ஆர்கலி – நிறைந்த ஓசையுடைய கடல்
- மெத்த – மிகுதியாக
- பந்தயம்- போட்டி
- புலவீர் –புலவர்களே
- கலைமடந்தை-கலைமகள்

## 7ம் வகுப்பு பருவம் 2 : இயல்கள் 1,2,3

- உண்பொழுது- உண்ணும் பொழுது
- பெறினும் –பெற்றாலும்
- பால்பற்றி -ஒருபக்கச் சார்பு
- தோல்வற்றி- தோல் சுருங்கி
- சாயினும் –அழியினும்
- சான்றாண்மை -அறிவு ஒழுக்கங்களில் நிலைத்து நிற்றல்
- குன்றாமை -குறையாது இருத்தல்
- தூஉயம் -தூய்மை உடையோர்
- ஈயும் –அளிக்கும்
- நில்லாமை –நிலையாமை
- நெறி –வழி
- தூய்மை- தூய தன்மை
- மாந்தர் –மக்கள்
- நிறை -ஒழுக்கம் மேலான ஒழுக்கம்
- தேற்றாதான் –கடைப்பிடிக்காதவன்
- வனப்பு –அழகு
- தூறு –புதர்
- வித்து –விதை
- தென்கமலை- தெற்கில் உள்ள திருவாரூர்
- பூங்கோயில் – திருவாரூர்க் கோவிலின் பெயர்
- புண்ணியனார் – இறைவர்
- மண்சுமந்தார் – வந்தி என்னும் கிழவிக்காக இறைவன் மண் சுமந்தார்
- உருகுவார் –வருந்துவார்
- பதுமை – உருவம்
- மெய்ப்பொருள் – நிலையான பொருள்
- கணக்காயர்–ஆசிரியர்
- மாரி மழை
- சேமம் நலம்
- தேசம் நாடு
- முட்டு குவியல்
- நெத்தி நெற்றி

## 7ம் வகுப்பு தமிழ் பருவம் 3 - இயல் 1, 2, 3

- திரு -செல்வம்
- நிவேதனம்- படையலமுது
- கனகம்- பொன்
- புரவி -குதிரை
- கோ -அரசன்
- கடுகி – விரைந்து
- மேழி கலப்பை
- வேந்தர்- மன்னர்
- ஆழி- மோதிரம்
- சூழ்வினை -உண்டாகும் வறுமைத்துன்பம்
- காராளர்- மேகத்தை ஆளுகின்றவர்களாகிய உழவர்
- கசடு - குற்றம்
- நிற்க - கற்றவாறு நடக்க
- எண் - எண்கள், கணக்கு
- எழுத்து - இலக்கண இலக்கியங்கள் (வரிவடிவம்)
- உவப்ப - மகிழ
- தலைக்கூடி - ஒன்றுசேர்ந்து
- உடையார் - செல்வர்
- இல்லார் - ஏழை
- எக்கற்று - கவலைப்பட்டு
- கடையர் - தாழ்ந்தவர்
- தொட்டனைத்து - தோண்டும் அளவு
- மாந்தர் - மக்கள்
- சாந்துணையும் - சாகும்வரையிலும்
- ஏமாப்பு - பாதுகாப்பு
- காமுறுவர் - விரும்புவர்
- விழுச்செல்வம் - சிறந்த செல்வம்
- மாடு - செல்வம்
- தத்தும் புனல் - தத்திச்செல்லும் நீர்
- முத்தம் -அடைக்கும் முத்துகள் மிக்குப் பெருகி இடையே அடைத்துக் கொண்டு கிடக்கும்,
- கலிப்புவேலை - கருமார், கொல்லர், தட்டார் முதலியோர் செய்யும் தொழில்கள்
- சித்ரம் சிறப்பான காட்சிகள்
- மதோன்மத்தர் - பெரும்பித்தனாகிய சிவபெருமான்
- கதி -துணை
- பேறு -செல்வம்
- நனி -மிகுதி
- தரம்- தகுதி
- புவி -உலகம்
- விண் வானம்
- வரை மலை
- முழவு மத்தளம்
- மதுகரம் தேன் உண்ணும் வண்டு

tnpscbooks

## 8ம் வகுப்பு இயல் - 1,2,3

- நிரந்தரம் - காலம் முழுமையும்
- வண்மொழி - வளமிக்கமொழி
- வைப்பு - நிலப்பகுதி
- இசை - புகழ்
- சூழ்கலி - சூழ்ந்துள்ள அறியாமை இருள்
- தொல்லை - பழமை, துன்பம்
- விசும்பு - வானம்
- மரபு - வழக்கம்
- மயக்கம் - கலவை
- திரிதல் - மாறுபடுதல்
- இருதிணை - உயர்திணை, அஃறிணை
- செய்யுள் - பாட்டு
- வழாஅமை - தவறாமை
- தழாஅல் - தழுவுதல் (பயன்படுத்துதல்)
- ஐம்பால் -ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்
- தூண்டுதல் - ஆர்வம் கொள்ளுதல்
- பயிலுதல் - படித்தல்
- ஈரம் - இரக்கம்
- நாணம் - வெட்கம்
- செஞ்சொல் - திருந்திய சொல்
- நன்செய் - நிறைந்த நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம்
- புன்செய் - குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம்
- வள்ளைப்பாட்டு - நெல்குத்தும்போது பாடப்படும் பாடல்
- முழவு - இசைக்கருவி
- முகில் - மேகம்
- வின்னம் - சேதம்
- கெடிகலங்கி - மிக வருந்தி
- வாகு - சரியாக

- சம்பிரமுடன் - முறையாக
- காலன் - எமன்
- சேகரம் - கூட்டம்
- மெத்த - மிகவும்
- காங்கேய நாடு - கொங்குமண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று
- தீர்வன - நீங்குபவை
- திறத்தன - தன்மையுடையன
- உவசமம் - அடங்கி இருத்தல்
- கூற்றவா - பிரிவுகளாக
- நிழல்இகழும் - ஒளிபொருந்திய
- பூணாய் - அணிகலன்களைஅணிந்தவளே
- பேர்தற்கு - அகற்றுவதற்கு
- பிணி - துன்பம்
- திரியோகமருந்து - மூன்று யோகமருந்து
- ஓர்தல் - நல்லறிவு
- தெளிவு - நற்காட்சி
- பிறவார் - பிறக்கமாட்டார்
- நித்தம் நித்தம் - நாள்தோறும்
- மட்டு - அளவு
- சுண்ட - நன்கு
- வையம் - உலகம்
- பேணுவையேல் - பாதுகாத்தால்
- திட்டுமுட்டு - தடுமாற்றம்

## 8ம் வகுப்பு இயல் - 4,5,6

- கலன் - அணிகலன்
- முற்ற – ஒளிர
- தடம் - அடையாளம்
- அகம்பாவம் - செருக்கு
- பண் - இசை
- கனகச்சுனை - பொன் வண்ண நீர்நிலை
- மதவேழங்கள் - மதயானைகள்
- முரலும் - முழங்கும்
- பழவெய் - முதிர்ந்த மூங்கில்
- அலந்தவர் – வறியவர்
- செறாஅமை – வெறுக்காமை
- நோன்றல் – பொறுத்தல்

- போற்றார் - பகைவர்
- கிளை – உறவினர்
- பேதையார் - அறிவற்றவர்
- மறாஅமை - மறவாமை
- பொறை - பொறுமை
- வாரி – வருவாய்
- எஞ்சாமை – குறைவின்றி
- முட்டாது - தட்டுப்பாடின்றி
- ஒட்டாது - வாட்டம்
- வைகுக - தங்குக
- ஓதை - ஓசை
- வெரீஇ - அஞ்சி
- யாணர் - புதுவருவாய்.

## 8ம் வகுப்பு இயல் - 7,8,9

- மறலி - காலன்
- கரி - யானை
- தூறு - புதர்
- அருவர் - தமிழர்
- உடன்றன - சினந்து எழுந்தன
- வழிவர் - நழுவி ஓடுவர்
- பிலம் - மலைக்குகை
- மண்டுதல் - நெருங்குதல்
- இறைஞ்சினர் - வணங்கினர்
- முழை - மலைக்குகை
- சீவன் - உயிர்
- சத்தியம் - உண்மை
- ஆனந்த தரிசனம்- மகிழ்வான காட்சி
- வையம் - உலகம்
- சபதம் - சூளுரை
- மோகித்து - விரும்பி
- பகராய் - தருவாய்
- ஆனந்த வெள்ளம் - இன்பப்பெருக்கு
- பராபரம் - மேலான பொருள்
- அறுத்தவருக்கு - நீக்கியவர்க்கு
- நமன் - எமன்
- சித்தம் - உள்ளம்
- நம்பர் - அடியார்
- நாணாமே - கூசாமல்
- உய்ம்மின் - ஈடேறுங்கள்
- ஈயில் - வழங்கினால்
- படமாடக்கோயில் - படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயில்
- நிறை - மேன்மை
- பொறை - பொறுமை
- பொச்சாப்பு - சோர்வு
- மையல் - விருப்பம்
- ஓர்ப்பு - ஆராய்ந்து தெளிதல்
- அழுக்காறு - பொறாமை
- மதம் - கொள்கை
- இகல் - பகை
- மன்னும் - நிலைபெற்ற

## 8ம் வகுப்பு பழைய புத்தகம் - இயல் 1,2,3

- சுடர் - ஒளி
- ஆனந்தம் - மகிழ்ச்சி
- பராபரம் - மேலான பொருள், இறைவன்
- இடுக்கண் - துன்பம்
- உடுக்கை - ஆடை
- நகுதல் - சிரித்தல்
- கேண்மை - நட்பு
- கிழமை - உரிமை
- அல்லல் - துன்பம்
- குழவி - குழந்தை
- பிணி - நோய்
- கழறும் - பேசும்
- மயரி - மயக்கம்
- சலவர் - வஞ்சகர்
- மன்னுயிர் - நிலைபெற்ற உயிர்.
- குவை - குவியல்
- மாரன் - மன்மதன்.
- வள்ளை -நெல் குத்தும்போது பெண்களால் பாடப்படும் உலக்கைப் பாட்டு
- அளகு -கோழி
- ஆழி -கடல்
- வடிஅம்பு -வடிக்கப்பட்ட அம்பு
- விசும்பு -வானம்
- செற்றான் - வென்றான்.
- அரவு – பாம்பு
- பிள்ளைக்குருகு – நாரைக்குஞ்சு
- வள்ளை - ஒருவகைநீர்க்கொடி.
- கடா -எருமை
- வெளவி - கவ்வி.
- சங்கின் பிள்ளை -சங்குக் குஞ்சுகள்
- கொடி - பவளக்கொடி
- கோடு – கொம்பு
- கழி – உப்பங்கழி
- திரை - அலை.
- மேதி - எருமை
- கள் -தேன்
- புள் - அன்னம்.
- தார் - மாலை
- செம்மைசேர் - புகழ்மிகு
- கடிமாலை - மணமாலை
- சூழ்விதி - நல்வினை.
- சேடி - தோழி
- ஈரிருவர் - நால்வர்
- ஊசலாடுற்றாள் - மனம் தடுமாறினாள்.
- காசினி - நிலம்
- நன்னுதல் - அழகிய நெற்றி.
- வெள்கி -நாணி
- களி கூர -மகிழ்ச்சி பொங்க
- வயவேந்து - வெற்றிவேந்தன் (நளன்).
- ஒண்தாரை - ஒளிமிக்க மலர்மாலை.
- மல்லல் - வளம்
- மறுகு - அரசவீதி
- மடநாகு - இளைய பசு
- மழவிடை - இளங்காளை
- செம்மாந்து - பெருமிதத்துடன்.
- மல்லல் - வளம்
- மறுகு - அரசவீதி
- மடநாகு - இளைய பசு
- மழவிடை - இளங்காளை

- செம்மாந்து - பெருமிதத்துடன்.

## 8ம் வகுப்பு பழைய புத்தகம் - இயல் 4,5,6

- மது - தேன்
- தியங்கி - மயங்கி
- சம்பு - நாவல்
- மதியம் - நிலவு.
- புகன்றாள் - கூறினாள்
- வண்டு-தாமரை
- மங்கையின் முகம்-நாவற்பழம்
- மலர்க்கரம்-வான்நிலவு
- வண்டு- நாவற்பழம்
- மங்கையின் முகம்- வான்நிலவு
- மலர்க்கரம்- தாமரை
- வாய்மை - உண்மை
- களையும் -நீக்கும்
- வண்மை - வள்ளல் தன்மை
- துலங்குதல் விளங்குதல்
- சேய்மை - தொலைவு
- தவம் - பெரும்பேறு.
- திடம் - உறுதி
- மெய்ஞ்ஞானம் - மெய்யறிவு
- உபாயம் - வழிவகை.
- தாது - மகரந்தம்
- போது - மலர்
- பொய்கை - குளம்
- பூகம் - கமுகம் (பாக்கு மரம்).

## 8ம் வகுப்பு பழைய புத்தகம் இயல் 7,8,9

- வழக்கு - நன்னெறி.
- ஆன்ற - உயர்ந்த.
- நயன் – நேர்மை
- நன்றி - உதவி.
- நகையுள்ளும் – விளையாட்டாகவும்
- பாடறிவார் - நெறியுடையார்.
- மாய்வது -அழிவது.
- அரம் - வாளைக் கூர்மையாக்கும் கருவி.
- நண்பு - நட்பு
- நயம்இல - தீங்கு,
- இனிமையற்ற கடை - இழிவு.
- நகல்வல்லர் - சிரித்து மகிழ்பவர்
- மாயிரு ஞாலம் - மிகப்பெரிய உலகம்.
- திரிந்தற்று - திரிந்ததுபோன்றது.
- பசியறாது - பசித்துயர் நீங்காது
- அயர்ந்த – களைப்புற்ற
- நீடிய - தீராத.
- வான்பெற்ற நதி –கங்கையாறு
- துழாய் அலங்கல் - துளசிமாலை
- களபம் -சந்தனம்
- புயம் – தோள்
- தைவந்து – தொட்டுத்தடவி
- நாமம் – பெயர்
- இருநிலம் - பெரிய உலகம்.
- ஊன் –தசை
- பகழி – அம்பு
- கைம்மாறு-பயன்
- மாசற்ற -குற்றமற்ற

- தேட்டையிட- செல்வம் திரட்ட
- மீட்சி - மேன்மை மாள - நீங்க.
- மதி- அறிவு
- அமுதகிரணம்-குளிர்ச்சியான ஒளி
- உதயம் –கதிரவன்
- மதுரம் – இனிமை
- நறவம் – தேன்
- கழுவு துகளர் – குற்றமற்றவர்
- சலதி – கடல்
- அலகு இல் – அளவில்லாத
- புவனம் – உலகம்
- மதலை – குழந்தை
- பருதிபுரி - கதிரவன் வழிபட்ட இடம் (வைத்தீசுவரன் கோவில்).

## 9ம் வகுப்பு புதிய புத்தகம்

### சொல்லும் பொருளும்

- குறம், பள்ளு - சிற்றிலக்கிய வகைகள்
- மூன்றினம் - துறை, தாழிசை, விருத்தம்
- திறமெல்லாம் - சிறப்பெல்லாம்
- சிந்தாமணி - சிதறாத மணி(சீவகசிந்தாமணி), என்னும் இருபொருளையும் குறிக்கும்
- சிந்து - ஒருவகை இசைப்பாடல்
- முக்குணம் - மூன்று குணங்கள் (சத்துவம்-அமைதி, மேன்மை ஆகியவற்றைச் சுட்டும் குணம்; இராசசம் - போர், தீவிரமான செயல்களைக் குறிக்கும் குணம்; தாமசம்சோம்பல், தாழ்மை போன்றவற்றைக் குறிக்கும் குணம்)
- பத்துக்குணம் - செறிவு, சமநிலை முதலிய பத்துக்குண அணிகள்.
- வண்ணங்கள் ஐந்து - வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை
- வண்ணம் நூறு - குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு.
- ஊனரசம் - குறையுடைய சுவை;
- நவரசம் - வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை ஆகிய ஒன்பது சுவை;
- வனப்பு- அழகு. அவை அம்மை , அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.
- குந்த– உட்கார
- கந்தம் - மணம்
- மிசை– மேல்
- விசனம் – கவலை
- மா - வண்டு

- மது - தேன்
- வாவி–பொய்கை
- வளர் முதல் - நெற்பயிர்
- தரளம் - முத்து
- பணிலம் - சங்கு
- வரம்பு - வரப்பு
- கழை- கரும்பு
- கா - சோலை
- குழை– சிறு கிளை
- அரும்பு – மலர் மொட்டு
- மாடு - பக்கம்
- நெருங்கு வளை- நெருங்குகின்ற சங்குகள்
- கோடு - குளக்கரை
- ஆடும் - நீராடும்
- மேதி - எருமை
- துதைந்து எழும் - கலக்கி எழும்
- கன்னி வாளை- இளமையான வாளைமீன்
- சூடு - நெல் அரிக்கட்டு
- சுரிவளை- சங்கு
- வேரி - தேன்
- பகடு - எருமைக்கடா
- பாண்டில் - வட்டம்
- சிமயம் - மலையுச்சி
- நளிகேரம் - தென்னை
- நரந்தம் - நாரத்தை
- கோளி - அரசமரம்
- சாலம் - ஆச்சாமரம்
- தமாலம் - பச்சிலைமரம்
- இரும்போந்து - பருத்த பனைமரம்
- சந்து - சந்தன மரம்
- நாகம் - நாகமரம்
- காஞ்சி – ஆற்றுப்பூவரசு

- யாக்கை– உடம்பு
- புணரியோர்– தந்தவர்
- புன்புலம் – புல்லிய நிலம்
- தாட்கு – முயற்சி, ஆளுமை
- தள்ளாதோர் இவண் தள்ளாதோரே- குறைவில்லாது நீர்நிலை அமைப்பவர்கள் குறைவில்லாது புகழுடையவர்களாக விளங்குவார்கள்.
- சமயக்கணக்கர்-சமயத் தத்துவவாதிகள்
- பாடைமாக்கள்- பலமொழிபேசும் மக்கள்
- குழீஇ-ஒன்றுகூடி
- தோம் - குற்றம்
- கோட்டி-மன்றம்
- பொலம்-பொன்
- வேதிகை-திண்ணை
- தூணம்-தூண்
- தாமம்-மாலை
- கதலிகைக்கொடி -சிறு சிறு கொடியாகப் பலகொடிகள்கட்டியது
- காழூன்று கொடி - கொம்புகளில் கட்டும் கொடி
- விலோதம் - துணியாலான கொடி
- வசி- மழை
- செற்றம்- சினம்
- கலாம்-போர்
- துருத்தி- ஆற்றிடைக்குறை(ஆற்றின் நடுவேஇருக்கும் மணல்திட்டு)
- வையம் – உலகம்
- மாக்கடல் – பெரிய கடல்
- இயற்றுக– செய்க
- மின்னாளை – மின்னலைப் போன்றவளை
- மின்னாள் – ஒளிரமாட்டாள்.
- தணல் – நெருப்பு
- தாழி - சமைக்கும் கலன்
- அணித்து – அருகில்
- தவிர்க்கஒணா– தவிர்க்கஇயலாத
- யாண்டும் – எப்பொழுதும்

- மூவாது – முதுமைஅடையாமல்
- நாறுவ- முளைப்ப
- தாவா- கெடாதிருத்தல்
- மைவனம் – மலைநெல்
- முருகியம்- குறிஞ்சிப்பறை
- பூஞ்சினை-பூக்களை உடைய கிளை
- சிறை- இறகு
- சாந்தம் – சந்தனம்
- பூவை- நாகணவாய்ப்பறவை
- பொலம்- அழகு
- கடறு- காடு
- முக்குழல்-கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல்கள்
- பொலி- தானியக்குவியல்
- உழை- ஒரு வகைமான்
- வாய்வெரீஇ- சோர்வால் வாய் குழறுதல்
- குருளை- குட்டி
- இனைந்து- துன்புறுதல்
- உயங்குதல்- வருந்துதல்
- படிக்குஉற- நிலத்தில் விழ
- கோடு- கொம்பு
- கல்-மலை
- முருகு- தேன், மணம், அழகு
- மல்லல்- வளம்
- செறு- வயல்
- கரிக்குருத்து- யானைத்தந்தம்
- போர்- வைக்கோற்போர்
- புரைதப- குற்றமின்றி
- தும்பி- ஒருவகைவண்டு
- துவரை-பவளம்
- மரை- தாமரைமலர்
- விசும்பு- வானம்
- மதியம்-நிலவு

- தெங்கு – தேங்காய்
- இசை– புகழ்
- வருக்கை– பலாப்பழம்
- நெற்றி – உச்சி
- தீபம் – விளக்கு
- சதிர் – நடனம்
- தாமம் – மாலை
- மால்வரை– பெரியமலை
- மடுத்து – பாய்ந்து
- கொழுநிதி – திரண்டநிதி
- மருப்பு – கொம்பு
- வெறி – மணம்
- கழனி – வயல்
- செறி – சிறந்த
- இரிய – ஓட
- சூல் – கரு
- அடிசில் – சோறு
- மடிவு – சோம்பல்
- கொடியனார் – மகளிர்
- நற்றவம் – பெருந்தவம்
- வட்டம் – எல்லை
- வெற்றம் – வெற்றி
- அள்ளல் – சேறு
- பழனம் – நீர் மிக்கவயல்
- வெரீஇ – அஞ்சி
- பார்ப்பு – குஞ்சு
- 'நாவலோ' - நாள் வாழ்களன்பது போன்றவாழ்த்து
- இசைத்தால் – ஆரவாரத்தோடு கூவுதல்
- நந்து – சங்கு